PAO COPY

ஆணையர் (மாநிலவரி) அலுவலகம் சென்னை-6 3608 11 JUN 2021 சென்னை (தெற்கு) கோட்டம்

**கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), முதன்மை செயலர்/ வணிகவரி ஆணையர், வணிகவரி ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: க. லஷ்மி ப்ரியா, இ.ஆ.ப.**

**செயல்முறை ஆணை எண். ஒய்–3/543882/2020–1**

04/05/2021

பொருள்: பொதுப்பணி – வணிகவரித் துறை – சென்னை (தெற்கு) கோட்டம் – மறைந்த அரசு ஊழியர் திரு. கே.நா. கிருஷ்ணபிரசாத் என்பவரின் மகன் திரு. என்.கே ஹரிஷ், இளநிலை உதவியாளர் –கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது – பணி வரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:
1. இணை ஆணையர் (மா.வ.), சென்னை (தெற்கு) கோட்டம், ந.க.எண்.5509/2019/அ 6, நாள் 12.06.2020.
2. கூடுதல் தலைமைச் செயலர்/வணிகவரி ஆணையர் அவர்களின் கடித எண். ஒய்–3/543882/2020, நாள் 21.09.2020.
3. அரசு கடித எண்.2403/அ ச 2/2020–1, நாள் 24.03.2021.
4. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.02.2021

A6

*******

**ஆணை:**

வணிகவரித் துறை, சென்னை (தெற்கு) கோட்டம், இணை ஆணையர் (மா.வ.), நுண்ணறிவு–2 அலுவலகத்தில் உதவி ஆணையராகப் பணிபுரிந்த போது 26.12.2018 அன்று மறைந்த அரசு ஊழியர் திரு. கே.நா. கிருஷ்ணபிரசாத் என்பவரின் மகன் திரு. என்.கே ஹரிஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, உதவி ஆணையர் (மா.வ.) அலுவலகம், ஜெ.ஜெ. நகர் வரிவிதிப்பு வட்ட அலுவலகத்தில் 06.12.2019 அன்று முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். தனியரின் பணியினை அவர் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 06.12.2019 அன்று முற்பகல் முதல் பணி வரன்முறை செய்யும் பொருட்டு, தனியரது கீழ்காணும் அனைத்து அசல் சான்றுகள்/ஆவணங்கள் ஆகியவை சரிபார்ப்பு பட்டியலுடன் ஒப்பு நோக்கி சரிபார்க்கப்பட்டது.

| | |
|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் கடிதம். |
| 2. | 18 கலன் கொண்ட முறைப்படுத்தப்பட்ட படிவம். |
| 3. | நியமன ஆணையின் நகல் |
| 4. | இறப்புச் சான்றிதழ் |
| 5. | வாரிசுச் சான்றிதழ் |
| 6. | குடும்பத்தில் உள்ள பிற வாரிசுதாரர்களின் மறுப்பின்மைச் சான்றிதழ் |
| 7. | ஒருங்கிணைந்த சான்றிதழ்<br>1. இறந்த அரசு ஊழியரின் மனைவி மறுமணம் செய்யவில்லை என்பதற்கான சான்றிதழ்<br>2. வருமானச் சான்றிதழ்<br>3. மற்ற வாரிசுதாரகள் எவரும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை என்பதற்கான சான்றிதழ்<br>4. அசையும் மற்றும் அசையாச் சொத்து சான்றிதழ்<br>5. வறிய நிலைச் சான்று. |
| 8. | தனியரின் கல்வித் தகுதிச் சான்றிதழ் |
| 9. | கல்விச் சான்றிதழின் மெய்த்தன்மை சான்றிதழ் |
| 10. | விண்ணப்பதாரரின் உறுதி மொழி |
| 11. | தனியரின் பணிப்பதிவேட்டின் முதல் பக்கம் மற்றும் பணிநியமனம் குறித்த பணிப்பதிவேட்டின் பக்க நகல்கள் உரிய அலுவலரால் மேலொப்பம் இடப்பட்டது. |
| 12. | இறந்த அரசு ஊழியரின் பணிவரன்முறை செய்யப்பட்ட அரசு ஆணை நகல் உரிய அலுவலரால் மேலொப்பம் இடப்பட்டது. |
| 13. | இதர சான்றுகள் / ஆவணங்கள் |

2. எனவே, திரு. என்.கே ஹரிஷ், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், **அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.02.2021-ன்படி** அவர் பணியில் சேர்ந்த நாளான 06.12.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

3. பணி வரன்முறை தொடர்பான செயல்முறை ஆணையை தனியருக்கு சார்வு செய்து அதன் நகலினையும், மேற்காணும் அசல் சான்றுகள்/ஆவணங்களை பெற்றமைக்கான ஒப்புதலையும் இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

G LAXMI PRIYA I A S, ADDL. COMMR-ADMIN(LPG)-CCT, O/o. JC-CCT-ADMIN

**பெறுநர்:**
திரு. என்.கே ஹரிஷ், இளநிலை உதவியாளர்,
உதவி ஆணையர் (மா.வ.) அலுவலகம்,
ஜெ.ஜெ. நகர் வரிவிதிப்பு வட்டம்,
சென்னை (தெற்கு) கோட்டம்.
(இணை ஆணையர் (மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம் மூலமாக)

**நகல்:**
இணை ஆணையர் (மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம்,
சம்பந்தப்பட்ட கணக்கு அலுவலர்,
(இணை ஆணையர் (மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம் மூலமாக)
இருப்புக்கோப்பு ஒய்-3.